

# உயிர்பெறும் பழமை நிலைக் கதவுகள்!

ஒரு வீட்டின் முகமே நிலையுடன் கூடிய கதவுகள்தான். தலைவாசல், உள் அறை, சந்து, கொல்லைப்புறக் கதவென இடத்திற்கேற்ப பெயரிட்டபோதும், நுழைவிடத்து வாயில் கதவிற்கே 'ராஜ நிலைக் கதவு' எனப் பெயரிட்டனர். நிலையுடன் கூடிய இந்த வாசற்கதவைத் திறந்துவைத்தால், 'நலம்' பெருகும் எனும் நம்பிக்கை இன்றும் நம்மூர்களில் நிரம்பி வழிகிறது. கதவில் எழுதும் எண்களே இன்றும் 'கதவிலக்கம்' என முகவரிக்கு முன் நிற்கிறது.





ஏழை வீட்டுக் குடிசைக் கதவுகள் தழை, மார், செடிகளில் அமைந்த 'படல்', மூங்கில் குச்சி, பிரம்பு, மரச்சட்டத்தில் ஆன 'தட்டி' வரை கொண்டுள்ளன.

பிரமாண்ட நிலைக்காலுடன் வைத்த மரக்கதவுகள் வசதியான வீடுகளை அடையாளம் காட்டுகின்றன. தகரம், இரும்பு கடந்து பிளாஸ்டிக் வரையிலும் இன்றைக்கு இந்த நிலைக்கதவுகள் பிறந்துள்ளன.

சமீபத்திய எகிப்து அகழ்வாய்வில் கிமு 750-656க்கு இடைப்பட்ட 2 ஆயிரத்து 700 ஆண்டுக்கு முந்தைய 'கல் கதவு' கண்டறியப்பட்டிருக்கிறது. இதனால் மரம், இரும்புக்கும் முன்பே நம்மினம் கல்லிலும் கதவு வடித்து பயன்படுத்திய வரலாறு தெரிகிறது.

பொதுவாக ஒரு கட்டுமானத்தில் வாசல் நிலையுடன், இதில் பொருத்தும் கதவே பிரதானம் பெற்று, மரபு, தகுதி, சமயம் அனைத்தையும் அவ்வீட்டின் கதவமைப்பு காட்டிக்



## பாணிகள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒருவிதம்...

அக்காலத்தின் நிலையுடன் கூடிய கதவுகள், பழைய கட்டடங்களில் இருந்து பிரித்தெடுக்கப்படுகின்றன. இவற்றை தற்போது காரைக்குடி, புதுச்சேரி, பிரிட்டிஷ் காலனி, மராட்டிய, மொகலாய பாணியென பலவித பாணியில் பிரித்து விடலாம். குறிப்பாக காரைக்குடி பாணி நிலை, கதவுகள் சிவகங்கை மாவட்டத்துடன், ராமநாதபுரம், விருதுநகர், மதுரை மாவட்ட வீடுகளின் மூலம் நுட்ப வேலைப்பாட்டுடன் கூடியதான நிலையும், கதவும் அதிகம் காண முடிகிறது.

ஃபிரெஞ்ச் தாக்கம் கொண்டிருக்கும் புதுச்சேரி பாணி நிலை, கதவு புதுச்சேரி பகுதிகளுடன், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, சென்னை உள்ளிட்ட வடமாவட்டங்களின் வீடுகள் மூலம் அறியப்படுகிறது. இதில் வீணை வாசிப்பு காட்சி துவங்கி நுணுக்க வேலைப்பாட்டுடன், கடவுள் உருவங்களும் இடம்பிடிக்கின்றன.

அடுத்து 'பிரிட்டிஷ்காலனி பாணி' நிலை, கதவுகள் இடம்பிடிக்கின்றன. நிலைக்கு மேலே கண்ணாடி வைத்த அமைப்பில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து இவ்வகை நிலையுடன் கதவுகள் காணலாம். பெரிதான நுணுக்க வேலைப்பாடு இருக்காது. கதவின் மையப்பட்ட 'வாசகப் பலகை'யானது, சதுர, செவ்வக அமைப்பில் இருக்கும். மதுரையின் அமெரிக்கன் கல்லூரி கட்டட கதவு, நிலை உள்ளிட்டவைகளே இதற்கான சாட்சியாயிருக்கின்றன.

இத்தோடு தஞ்சை உள்ளிட்ட பகுதிகளின் நிலை, கதவு குறைந்த சிற்ப வேலைப்பாட்டுடன் மராட்டிய பாணி கொண்டிருக்கின்றன. மேலும் மொகலாய பாணியில் ஆர்ச் வடிவங்களுடன், பூவேலைப்பாடுகளும் அதிகமிருக்கிறது. எந்த உருவங்களின் பதிவுமின்றி, ஜியோமெட்ரிக் எனும் செவ்வகம், முக்கோணம் உள்ளிட்ட ஜாமெட்ரி வடிவமே இதில் மிகுந்திருக்கிறது.



கீழக்கரை துவங்கி காயல்பட்டினம், மதுரை என பல்வேறு ஊர்களிலும் இப்பாணியிலான நிலை, கதவு காண முடிகிறது. இத்துடன், கதவுக்கான முன்வாசல் நிலைகளை 'பால' நிலை, 'பெட்டி' நிலை என்கின்றனர்.

சுவரின் அகலம் ஒன்றரை அடிக்குள் இருப்பின், அந்த அளவிற்கே முழுமையாக மரத்தில் நிலை செய்து பொருத்துவது பால நிலையாகும். சுவரின் அகலத்திலும் குறைவாக நிலை பொருத்தி, கதவை ஒட்டிய முப்புறச் சுவரின் சிமெண்ட் பகுதியை மறைத்து, வெளிப்புறத்தில் நிலை மாதிரிகளை வைத்து வடிவங்கள் செதுக்கி அழகூட்டுவது பெட்டி நிலை எனப்படுகிறது.

கொடுக்கிறது.

தற்போதுவரை ஒற்றை, இரட்டை கதவுகளே அதிகம் உருவாகின்றன. மடக்குக் கதவு குறைவுதான். நிலையுடன் 'கீல்' எனும் இணைப்பு கொண்டதையே கதவென கொண்டனர். செருகு கதவுகள் இருப்பினும் அவை விளைந்து வரும் நெல்லினை கொட்டி வைக்கும் 'மச்சு'க்கும், வணிகக் கடைகளுக்குமே பயன்படுத்தப்பட்டு, இதனை 'அடைப்பு' என்றே அழைத்தனர்.

உரிமையாளர் மட்டுமே கழற்றி மாற்ற முடிகிற சொருகு பலகைகளால் ஆன இந்த 'மேஜிக் அடைப்பு கதவுகள்' இன்றும் தென்மாவட்ட பழமை கிராமங்களில் பயன்பாட்டில் இருக்கின்றன. இவை அன்றைய நம்மவர்களின் அறிவுத் திறனை அறிய வைக்கின்றன.

கதவுகளின் மையப்பகுதியிலமைந்த 'வாசகப் பலகை' அமைப்பு முக்கிய அங்கம் பெறுகிறது. இதனால் ஜியோமெட்ரிக் வடிவங்களுடனும், பூக்கள், விலங்குகள், பறவைகள் உள்ளிட்ட சிற்பங்களுடனும் ஒரு கலைப் பொக்கிஷமாக கதவுகளை இவையே வடிவமைக்கின்றன.

துவக்கத்தில் பலகைகளை பின்புறம் ரீப்பர் எனும் இடைப்பலகையால் இணைத்தது போக, பின்னாளில் இணைப்பில் வலிமை சேர்த்திடவும், அழகூட்டவும் ரீப்பர் தவிர்த்து, மேற்புறம், நடுப்புறம், கீழே என முன்னாள் 'கம்பக்கட்டை' வைத்து இதில் முன்புறம் பித்தளை 'பூண்'கள் பொருத்தி, கதவுக்குப் பின்னே அடிப்புறத்தில் நான்குமுக 'நட்டுகள்' திருகி, வாசக மற்றும் கதவுப் பலகைகளின் இணைப்பில் வலிமை சேர்த்தனர்.

ஒற்றைக் கதவென்றால் குறைந்தது 9 முதல் 15 மொத்த எண்ணிக்கையில், குறைந்தது மூன்று வரிசைகளில் இந்த 'பித்தளை பூண்'கள் இணைப்பிருக்கும்.

'கம்பக்கட்டை' எனும் சற்றுயர்ந்த இடைக்கட்டையின் மீதே இந்த பித்தளை பூண்களை பொருத்தி வைத்திருப்பது நம்மூர் வீடுகள், ஆலயங்களின்

## சிறிய வீடாக இருந்தாலும்.. பெரிய நிலைக்கதவு...

கட்டட வடிவமைப்பாளரான ஆர்க்கிடெக்ட் மதுரை ஸ்ரீமதி கூறும் போது, "எங்களிடம் பழமை மரப்பொருட்களைப் பயன்படுத்தி கட்டுமானம் கேட்பவர்களில் 10 பேரில் 9 பேர் 'ராஜ நிலைக்கதவு' எனும் முன்கதவை பழமை மாறாத நிலையில் கலைத்துவமாக பிரமாண்டமாக அமைத்துத் தர வேண்டுகின்றனர். மரத்தின் சிற்ப வடிவங்களே திருத்தமாக அமைகின்றன. அத்தோடு இது வீட்டு நுழைவிடமாக இருப்பதால் சிறிய வீடாக இருந்தாலும்கூட நிலை, கதவு அளவுகளை அகலம், நீளம் விரிவாக அமைத்துத்தரவும் வேண்டுகின்றனர். பூஜை அறையிலும் கூட ராஜநிலைக் கதவு வடிவ விருப்பத்தின்பேரில் பழமை வடிவத்தையே கேட்டு வாங்குகின்றனர்..." என்றார்.

ஸ்ரீமதி



கதவுகளை பேரழகில் ஜொலிக்கச் செய்தது.

இரட்டைக்கதவிலும் அழகுக்கென பொருத்தும் இந்த 'பித்தளை பூண்'கள் கம்பீரத்தில் மிரட்டி விடுகின்றன. கூர்மையான நுனி கொண்ட மலரிதழை ஒத்த குமிழான இந்த பித்தளை பூண்களால் அலங்கரித்த இக்கதவுகளை நம் சங்க இலக்கியங்கள் 'கிம்புரிக் கதவு'கள் என்கின்றன.



ஒற்றைக் கதவுகளே அக்காலத்தில் அதிகம் இடம்பெற்ற நிலையிலும், பின்னாளில் இரட்டைக் கதவில் ஒன்றைத் திறந்து வைக்கும் வசதி உள்ளிட்டவைகளால் இக் கதவும் வரவேற்பு பெற்றது.

கன்னியாகுமரி மாவட்ட பகுதிகளில் பாதி கீழே, பாதி மேலே யென நீளக் கதவை பிரித்துவைத்து, கீழ் கதவை மூடிக்கொள்ள பாம்பு, பூச்சிகள் உள்நுழையாமலும், மேற் கதவு திறந்து வைக்க காற்று வந்துபோகவசதியுடனும் அமைக்கப்படுகின்றன.

கதவுகளில் பித்தளை பூண்கள் மட்டுமல்லாது, கனமான கதவினை தாங்கும் பெரிய பட்டாவுடன் இணைந்ததான 'கீல்', அத்துடன் பின்புறத்தில் இரும்பிலான பூட்டு, இதற்காக பித்தளையில் முன்புற சாவித்துளைக்குரிய உருவங்கள் வடிவிலான மறைப்புத் தகடு, யாளி உள்ளிட்ட பலதரப்பட்ட கலை உருவங்களுடனான, பிறைநிலா மாதிரியான இழுப்பு கைப்பிடிகள் அத்தனையும் பழமையின் அற்புத அழகு பேசுகின்றன.

அரைவட்ட பிறை வடிவில் தொங்கும் இந்த இழுப்பு கைப்பிடியை அடுத்தடுத்து தட்ட, அது கதவு பலகையில் அடித்து ஒலி எழுப்பி, 'இன்றைய காலிங் பெல்' பலனைத் தரும். இதிலும் இந்த இழுப்பு கைப்பிடி தட்டுமிடத்திலும் கதவுப்பலகை சேதப்படாதிருக்க பித்தளைத்தகடு பதிக்கப்பட்டிருக்கும். கதவுகளின் பூட்டுக்கான சாவிகளும் கூட அளவில் பெரிதாக, அநேக சிற்ப வடிவங்கள் கொண்டதாக பிரமாண்டம் காட்டி நிற்கின்றன.

கதவைச் சாத்தி உட்புறம் மேலும், கீழும் தாழ்ப்பாளிட்டு கைப்பிடி இழுத்து சாவியை முறுக்கி கதவைச் சாத்திச் செல்லும் அக்காலத் தோரணையும் அழகானது. பெரும்பாலும் கதவுக்கான பூட்டு இரும்பால் இருக்கிறது.

பொதுவாக நிலைக் கதவுகள் அக்காலத்தில் பர்மா, கொல்லம் தேக்கு ரகங்களிலேயே அதிகளவில் படைக்கப்பட்டன. பிரிட்டிஷார் காலத்தில் கேரள மாநிலத்தின் நிலாம்பூர் தேக்கும் பயன்படுத்தினர்.

அதிகளவில் இலங்கையிலிருந்து எடுத்து வரப்பட்ட ரோஸ்வுட் எனும் தோதகத்தி, புரசு மரங்களும் பயன்பட்டன. கப்பல் பயணத்தில் இழுத்து வரப்பட்ட பர்மா தேக்கில் பல நூறு கட்டடங்கள் தமிழ்நாட்டில் உருவாயின. வேம்பு, அய்னி(பலா ரகம்), மஞ்சக்கடம்பு, வெண்கடம்பு, பிள்ள மருது, வேங்கை, கோங்கு, கருமருது என குறிப்பிட்ட ரகங்களை குறி வைத்து நிலையும், கதவும் அமைத்தனர்.

பொதுவாக தென்மாவட்ட பழமை வீடுகளில் வாயிற்படியை மரப்பலகைக்குப் பதில் வெள்ளை கிரானைட் கற்களில் வைத்தனர். விரைவில் இந்த மர வாயிற்படி தரை தண்ணீர் பட்டு இற்றுப்போன காரணத்தால், நிலைப்படிகளில் மரப்படிகள் வைத்துக்கட்டுவது குறைந்து போயின.

வீடுகளை விடவும் அரண்மனைகள், கோட்டைகள், கோயில்களில் இருந்த நிலை, கதவு வேறுபட்டு நின்றன. நம்மூர் கோயிற்கதவுகளின் பிரம்மாண்டம் நம் கலாசாரத்தின் பெருமையை உணர்த்தி, கலைத்திறனுக்கு சாட்சி பகர்ந்து நிற்கின்றன.

மதுரை அழகர்கோயில் பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி, தேனி மாவட்டம் தேவதானப்பட்டி மூங்கில் அணை காமாட்சியம்மன் உள்ளிட்ட கோயில்களில் இன்றளவும் கதவுகளுக்கே பூஜைகள் நடக்கின்றன.

பெரும் கோயிற்கதவுகளில் ஆட்கள் சென்று வருவதற்கெனவே சின்னதாய் 'கேட் கதவு' இருப்பதும் அழகுதான். மதுரை நகரமும் சுற்றிய அகழியுடன் கூடிய கோட்டைக்குள் மூடிய பிரம்மாண்ட கதவுகளுக்குள் ஒரு காலத்தில் இருந்ததை பழங்கதை காட்டுகிறது. பொதுவாக கோட்டை கதவில் பின்புறத்தில் தாழ்ப்பாள், பூட்டுடன், உள்பட்டா இருக்கும். பாதுகாப்புக்கென எவரும் கோட்டைக்கதவை உடைத்து உள்ளே வரக் கூடாதென பெரும் பட்டா மாட்டி வைத்தனர்.

'அடைத்துக் காக்கும்' பணியே கதவுகளுக்குரியன. எனினும் விருந்தோம்பலில் உறவுகளை எதிர்நோக்கி நம்மவர்களின் வீட்டுக் கதவுகள் காவல் தேவையின்றி அக்காலத்தில் திறந்தே கிடந்தன. இன்றும் அடைத்து பூட்டிய வீட்டுக்குள் சாவியோடு தனித்துக் கிடக்கிற நம்மவர்களை இந்த நிலைக் கதவுகளே 'காத்து' வருகின்றன. காலங்கள் மாறினாலும், கதவின் குணம் மாறவில்லை.

மக்கள் வசித்த வீடுகள் துவங்கி மன்னர்கள் வாழ்ந்த அரண்மனை வரை நிலை, கதவு பயன்பாடு பழங்காலத்து நம்மவர்களின் வாழ்வியலுடனேயே வழிவழியாய் தொடர்கிறது. இப்போதும் வீடுகளின் பழமையான நிலைகளை, கதவுகளை அழிந்து விடாது பெயர்த்தெடுத்து வந்து, உயிர்ப்படுத்தி நவீன வீடுகளிலும் பொருத்திப்பார்த்து பழம்பெருமை போற்றும் பண்பாடு தொடர்கிறது.

கடந்த காலத்து கலைப்பொக்கிஷங்களான இந்த நிலை, கதவு



## மறு உருவாக்கம் சவாலான பணி...

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியைச் சேர்ந்த சிற்பி செல்வம் கூறும்போது, "ஒரு பழங்கட்டடத்தை 8 பாகமாக பிரித்து, பொருட்களை தனித்தனியாக எடுத்து வந்து தருகின்றனர். மிகுந்த ரசனை, கற்பனையுடன் ஒவ்வொரு சிற்பத்தையும் அணுகி மறு வடிவமைத்து உயிர்ப்பிக்கிறோம்.

ராஜநிலையை பிரமாண்டமாகவும், கதவை அதனிலும் அளவில் சற்றுக் குறைவிலும் வடிக்கிறோம். விநாயகர் முதல் வள்ளி, தெய்வானையுடன் முருகப்பெருமான் என மேலிருக்கும் சூரியப்பலகையில் இறை உருவமிருக்கும், கீழே யானை வைத்து தாங்கி இருப்பது போலும், யாளி வடிவங்களும், கீழே அடுக்கடுக்கான நாகபந்தங்களுடன் பலதரப்பட்ட சிற்பங்களை மறு உருவாக்கப்படுத்துவோம்.



செல்வம்

வேலைப்பாடுள்ள கதவுடன் பர்மா தேக்கு நிலை ரூ.30 லட்சம் வரையிலும் கூட கிடைக்கிறது. குளவிக் கூடுகள், தூசி, அழுக்கை கம்ப்ரசர் வைத்து கிளீன் செய்து, இவற்றை பழமை மாறாது சிற்பவேலைப்பாடு செய்து மீட்கிறோம். ஏதேனும் ஒரு மரப்பொருள் தண்ணீர் பட்டோ, பிற காரணத்தால் சேதமுற்றோ இருப்பின் பெரிய ஓட்டல்கள் உள்ளிட்டவைகளுக்கு அழகுப்பொருளாக சிற்பத்திருத்தம் செய்தும் மாற்றித்தருகிறோம்.

அத்தனையையும் எடுத்து தேய்த்து, பழைய நிலைக்கு கொண்டு வருவது சவாலான பணி. இந்த பழம்பொருட்களை மறு உருவாக்கம் செய்கிற ஆட்களும், சிற்பிகளும் இப்போது மிகக் குறைந்து விட்டார்கள். செட்டிநாட்டுப் பகுதியினரே சிலர் பார்த்து வருகின்றனர்.

தற்போது இவ்வகை பணிக்கென மரச்சிற்பிகள் உருவாக்கத்தில் தமிழ்நாடு அரசு பல்வேறு பயிற்சிகள் வழங்கி, இச்சிற்பப் பணியாளர்கள் அதிகரித்து வருவதும் வரவேற்பிற்குரியது. பழம்பொருட்களின் சிற்பக் கலை வடிவங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அடுத்த சந்ததியினர் நம் மூதாதையரின் திறன் கண்டு ஆச்சர்யப்பட வேண்டும்..." என்றார்.

...பாற்றும் ஆர்வலர்களும் அதிக
...த்து வருகின்றனர். இதற்கேற்ப இந்த
...டல் தாகமிருப்போரின் ரசனைக்
...ற்ப பழம்பொருட்களை சீரமைத்து
...டுருவாக்கமும், பழைய வடிவச்
...தைவின்றி புதிதாய் உருவாக்கித்
...ரும் படைப்பாக்கமும் என தென்
...வட்ட பகுதிகளில் நிலை, கதவுகளை உயிர்ப்பித்துத் தரும் நிறுவனங்களும் பிறந்துள்ளன.

இவ்வகையில் இப்பணியை கலையுணர்வு மிளிர மிக நுட்பத்துடன் செய்து வரும் மதுரையின் 'சித்திரமாடம்' கிரியேட்டிவ் ஹெட் இ. இலக்கியாவிடம் பேசினோம்.

"பழங்காலம் முதல் இன்று வரை



## பன்மடங்கு மகிழ்ச்சி

➲ தமிழ்ச்செல்வன்

தனது புதிய வீட்டில் பழங்காலத்து நிலைக்கதவு பயன்படுத்தியுள்ள மதுரை விரகனூர் தமிழ்ச்செல்வன் கூறும்போது, "எங்கள் குடும்பமே இயற்கை ரசிகர்கள்தான். வீடுதாங்க சந்தோசம், வாழ்க்கை, ஆயுள் எல்லாமும்.

வேலைப்பாடுமிக்க பழைய மரங்களைப் பயன்படுத்தி நிலை, கதவுன்னு சகலமும் செய்துள்ள என் வீட்டிற்குள் நுழையும்போது, ஒரு கோயிலுக்குள் நுழைகிற பெரிய மன அமைதியும், வீட்டுக்குள் குளிர்ந்த சூழலும் இருக்கிறது. நுட்பமான கலையழகுள்ள நிலைக்கதவுகள் உள்ளிட்டவைகளுக்கு மும்மடங்கு செலவிருக்கும்... ஆனாலும் பன்மடங்கு மகிழ்ச்சி கிடைத்துள்ளது..." என்கிறார்.

யிலும் ஒவ்வொரு வீட்டின் நுழைவு வாயிலையும் உள்ளார்ந்த உணர்வுடன், ஆன்மிகப் புனிதத்துடன் போற்றுகின்றனர். யாளி, அன்னப்பறவை முதல் பெருமாள் சக்கரம் துவங்கி இறையுருவங்கள், சின்னங்கள் வரையிலும் தீய சக்திகளைத் தடுத்து, நேர்மறை ஆற்றலை நிறைக்கும் நம்பிக்கை அத்தனை பேரிடமும் மிளிர்கிறது.

கலை நுணுக்க வேலைப்பாடுகள் கலாசார அடையாளத்துடன், குடும்பத்தின் செழிப்பை, கவுரவத்தைக் காட்டுகின்றன. இந்த வகையில் நம் ஊர்களின் பழைய கட்டடங்களில் இடிக்கப்படும் கலையழகுமிக்க கதவு நிலைகளை சேகரிக்கிறோம்.

பெரும்பாலும் ஐந்தரை அடி கதவுகளுடனேயே நிலைகள் கிடைக்கின்றன. இவை பிரிக்கப்பட்டு கூடுதல் பழைய மரப்பலகைகள் இணைத்து ஃபிரேம் அமைத்து ஆறரை, ஏழடி அளவிற்கு உயரத்துக்கு நிலைக்கதவுகளை தயார்படுத்துகிறோம்.

பழைய மரப்பலகைகள், பேனல்கள் கொண்டு இந்த உயர மாற்றம் செய்ததும், ஓட்டை உடைசலை அவ்வகை பழைய மரத்துண்டுகளாலேயே சரி செய்து, மரச்சிற்பிகளைக் கொண்டு வடிவ ஒழுங்குடன் சீரமைக்கிறோம். பழைய மரப்பலகைகளில் பழங்கால கலை வடிவத்துடன் நிலை, கதவுகளை புதிதாக வடிவமைத்துத் தருகிறோம்.

உத்திரம் போன்ற பலகைகளை கம்ப்யூட்டர் சாப்ட்வேர் துணையில் 3டி வடிவத்தில் மாற்றி மெஷின் லாங்வேஜ்க்கு கொடுத்தால், 'கம்ப்யூட்டர் நியூமரிக்கல் கன்ட்ரோல்' (சிஎன்சி) எனும் கருவி கொண்டு வேண்டிய சிற்ப, வேறுபட்ட உருவ வேலைப்பாடுகளை 60 சதவீதத்திற்கான வடிவத்தில் செதுக்கிப் பெறலாம்.

இந்த சிஎன்சி கருவியைக் கடந்து, கை இயந்திரம் மூலம் 10 சதவீதம் சரிப்படுத்தி, மரச்சிற்பி மிச்ச 30 சதவீதத்திற்கு நுண்ணிய உளிகளால் வேலைபார்த்து முழுமை பெறச் செய்கிறார். பெரும் நேரச் செலவில் நிகழ்த்தும் இந்தப் பணியில் தீராத ஆர்வமும், பழைய நம் பண்பாட்டு விஷயங்களை இன்றிருக்கும் இளைய







## ஒரு சிறு மரத்துண்டும் வீணாவதில்லை...

புதுச்சேரி பழமை மரக் கட்டுமானப் பொருள்கள் சேகரிப்பாளர் வேல்முருகன் கூறும்போது, "பழங்காலத்தில் பூவரசு மரத்தில்தான் நிலை, கதவு செய்தார்கள். இதைத்தான் ஏழைகளின் தேக்குன்னு சொன்னாங்க. செல்வந்தர்கள் தேக்கு பயன்படுத்தினார்கள். அடுத்தடுத்து முதிரம், தோதகத்தி உள்ளிட்ட வெவ்வேறு மரங்கள் வந்தாச்சு.

ரசிச்சு ரசிச்சு ஒவ்வொண்ணையும் உருவாக்கினார்கள். இந்த மரங்களின் நிலை, கதவால் வாழ்வு மேம்படும்னு ஐதீகம். இன்றைய நிலை, கதவில் பிளைன் ஒர்க் இருப்பதால், பழமையான கலை வடிவங்களை ஒரு பெரும் தரப்பினர் விரும்புகிறார்கள். பழைய நிலைகளில் காமதேனு உருவம்தான் அதிகமிருக்கிறது.

இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் வேறுபாடின்றி பெருமாள், சிவன் மட்டுமல்லாது பிறை, சிலுவைன்னு அவரவர் வழிபாட்டு தெய்வங்கள், வடிவங்கள் வைக்கிறார்கள்.

பழைய கட்டடங்களை இடித்து ஒரு மரத்தின் சிறு துண்டு கூட வீணாகாமல் அனைத்தையும் சேகரித்து மறு உயிர் தருகிறோம். இந்த மறு உயிர்ப்பால், மண்ணின் இன்றைய மரங்கள் காக்கப்படுகின்றன. வைரம்பாய்ந்த பழங்கால மரங்கள் உயிர் பெற்று இன்னும் பல நூறு ஆண்டுகள் பயனளிக்கின்றன..." என்றார்.

சந்ததிக்கு கொண்டு சேர்க்கும் திருப்தியுமே எங்களிடம் நிறைந்திருக்கிறது..." என்கிறார்.

தொடர்ந்து பேசிய இ. இலக்கியா, "பழசை புதுசாக மாத்துவதால் இப்போதுள்ள மரங்களை வெட்டாமல், வரும் சந்ததிக்கு விட்டு வைக்கிறோம். ஒரு கனமீட்டர் மரம் வளிமண்டலத்தின் 0.25 டன் கார்பனை சேமிச்சு வைக்குதாம். எரிக்கும்போதோ, மக்கும்போதோ தான் கார்பன்டை ஆக்சைடாக வெளியாகி சூழல் பாதிப்பை தருது. பழைய மரங்களை கலைப்பொருளாகவோ, நிலை, கதவாகவோ மாற்றும்போது இதன் வாழ்நாள் கூடுது.

வளிமண்டலத்தில் கார்பன் கலப்பதைத் தடுத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்குது. இந்தியாவில் 2024ல் மரங்களின் மறுசுழற்சி வணிகம் ரூ.50ஆயிரம் கோடிக்கு இருப்பதாகவும், மறுசுழற்சி பயன்பாட்டில் 40 முதல் 50 சதவீதம் மரங்கள் பயன்படுத்துவதாகவும் தெரிய வந்துள்ளது. இந்த வகையில் பல கோடி டன் கார்பன்டை ஆக்சைடை வளிமண்டலத்தில் கலக்காமல் பாதுகாக்குற வேலையில் எங்களது பங்கும் இருக்கிறது. இதே அளவிற்கு புதிய மரங்கள் வெட்டப்படுவதும் தடுக்கப்படுவது பெருமையளிக்கிறது..." என்றார்.

பழமைப் பண்பாட்டை மனிதர்களான நாம் மறந்து வரும் நிலையில், நம் பழமைகள் உயிர்பெற்று உலா வருவதும், புதிய தொழில்நுட்பத்தில் பழைய கள் புதிய மொந்தையில் பரிமாறப்படும் வகையில் பழசுக்கும் மவுசு பெருகி வருவதும், நம் கலாச்சார பண்பாட்டு வாழ்வியலை வளம் பெறச் செய்து, நம் முன்னோரின் அறிவுத்திறனுக்கு அடையாளம் காட்டி நிற்கிறது. மரங்களைக் காத்து உலகையே மாசுபடாது சுற்றுச்சூழல் மேம்பாடு காப்பதிலும் நம் பழைய பண்பாடு காக்கும் முயற்சிகள் உதவி வருவது வரவேற்பிற்குரியது.

- செ. அபுதாகிர்

படங்கள்: வெற்றி